2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(1) மேட்டூர் அணையிலிருந்து காவேரி டெல்டா பிரதேசப் பாசனத்திற்கு தண்ணீர் விடாதது குறித்து.

THIRU G. SWAMINATHAN : Sir, I seek consent to move a motion for adjournment of the business of the Council under rule 43 of the Council Rules to discuss a definite matter of urgent public importance, namely, non-letting out of water from Mettur Dam for the irrigation in Cauvery Delta especially in Thanjavur District. The agriculturists of this Delta are worried due to low storage position in Mettur Dam consequent on poor inflow from Krishna Raja Sagar Dam this year. Agriculturists look forward for very early and immediate clarification from the Government regarding the steps intended to be taken by the Government to augment the water position in Mettur Reservoir so as to let out water for Kuravai cultivation this year. Besides lakhs of landless labour also look forward for an assurance from the Government that they will have employment opportunities by early release of water from Mettur Dam.

துணைத் தலைவர் அவர்களே, தற்போது மேட்டூரிலே தண்ணீர் அளவு எனக்குக் கிடைத்த விவரப்படி 55 அடி என்று சொல்கிறார்கள். கிருஷ்ணராஜசாகர் டாமில் 101 அடி தண்ணீர் இருந்ததாகத் தெரிகிறது. மேட்டூருக்கு தண்ணீர் அளவு 5-ம் தேதி 545 க்யூசெக்கும் 6-ம் தேதி 1,150 க்யூசெக்கும் வந்திருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் நமக்கும் மைசூர் மாநிலத்திற்கும் இடையே ஏற்பட்ட 1924-ம் ஆண்டு உடன்பாட்டின்படி தண்ணீர் கொடுக்கப்பட்டிருந்தால், இத்தனை நேரம் மேட்டூர் முழுவதும் நிரம்பி தஞ்சை மாவட்டத்திற்கு வருகின்ற தண்ணீர் நல்ல பாசன வசதியை அளிக்கும் நிலைமையில் இருந்திருக்கும். ஆனால் இப்போதுள்ள நிலைமையைப் பார்க்கும்போது, குறுவை சாகுபடிக்கு இந்த மாதம் முதல் வாரத்தில் அல்லது இரண்டாவது வாரத்தில், அணைக்கட்டிலே உள்ள தண்ணீரைப் பார்த்தால், தகுந்த அளவுக்கு தண்ணீர் பாசனத்திற்குக் கிடைக்குமா என்ற சந்தேகம் தஞ்சை மாவட்ட விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது. இதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கிருஷ்ணராஜசாகர் அணையில் முழுவதும் தண்ணீர் நிரம்பி, அதே சமயத்தில் மேட்டூருக்கு வரும் தண்ணீரைக் குறைக்கும் காரியம் 1971 ஆம ஆண்டோடு முடிந்து விட்டது. அவர்களுக்கு வேண்டிய தண்ணீரை நிரப்பிக்கொண்டு, அதற்கு மேல் வேண்டுமானால் கொஞ்சம் தண்ணீரை தஞ்சை மாவட்டத்திற்கு விடலாம் என்ற எண்ணம் கருநாடக மாநிலத்திற்கு இருப்பதாகத் தெரிகிறது. கடந்த பல ஆண்டுகளாக இதற்கு முன்னால் இருந்த அரசு அடிக்கடி கருநாடக மாநிலத்திற்குச் சென்று பேசியதையும், விரைவில்

1977 ஜூலை 9] [திரு. ஜி. சுவாமிநாதன்]

நல்ல முடிவு எடுக்கிறோம் என்று சொல்லியதையும், ஆனால் எந்தவிதமான முடிவும் இதுவரையில் எடுக்கப்படவில்லை என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பற்றாக்குறை நாட்களில் போதுமான தண்ணீர் இந்த மாநிலத்திற்குப் பகிர்ந்தளிக்கப்படும் என்ற திட்டம் என்னவாயிற்று என்று தெரியவில்லை. தஞ்சை மாவட்ட விவசாயிகள் மட்டுமல்லாமல், கிட்டத்தட்ட $4\frac{1}{2}$ லட்சம் அல்லது 5 லட்சம் ஏக்கருக்கு பாசன வசதி கிடைக்காவிட்டால், பல கோடிக்கணக்கான ரூபாய் அளவுக்கு நஷ்டமும் லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பின்மையும் ஏற்படும். அதனால் இந்த ஆண்டு குறுவை நிச்சயமாகப் போடுவதாக இருக்கிறோம். அரசு அதற்கான ஏற்பாட்டினைச் செய்ய வேண்டும். கருநாடக மாநிலத்தில் குறுவையைப் பற்றி எப்படியிருந்தாலும், தஞ்சை மாவட்டத்தில் சம்பா போட்டால் போதும் என்ற நினைப்போடு அவர்கள் செயல்படுகிறார்கள் என்று தெரிகிறது. ஆகவே தஞ்சை மாவட்டத்தில் தாளடி, குறுவை இரண்டும் போடுவதற்கான பாசன வசதிகளைச் செய்ய அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினை முக்கியமாக இருப்பதால், அவையின் நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கோ. சி. மணி: துணைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அணையிலிருந்து காவிரிக் கழிமுகப் பகுதிக்கு, குறிப்பாக தஞ்சை மாவட்டத்திற்கு அங்குள்ள விவசாயிகளுக்கு பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடாததால், வேலையிழந்து நிற்கும் லட்சக் கணக்கான விவசாயத் தொழிலாளர்கள், அந்தத் தொழிலை நம்பியிருக்கிறவர்கள் பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைப் பற்றி விவாதிப்பதற்காக சபையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டு மட்டும் இந்த நிலை ஏற்படவில்லை. சென்ற ஆண்டு குறுவை நட்ட பிறகு தாளடி நட வேண்டாமென்று அரசு தரப்பிலிருந்து உத்தரவு வரப்பெற்றது. நட்ட குறுவைகள் அறுவடையான பிறகு, தாளடி நடமுடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்படி இரண்டு பசலியாக தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. மேட்டூரில் ஒரு சமயம் 48 அடி தண்ணீர் இருக்கும்போது, தஞ்சை மாவட்டத்திற்கு குறுவை பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு, தண்ணீர் பங்கீடு செய்யப்பட்டு வெண்ணார், காவிரி இரண்டு பிரிவுக்கும் மாற்று முறை வைக்கப்பட்டு, கடைசி வரையில் தண்ணீர் கிடைக்கும் நிலைமை இருந்ததை விவசாயிகள் அறிவார்கள். இதை நானும் உணர்ந்திருக்கிறேன். இந்த ஆண்டு பருவ நிலை திடீரென்று ஏற்பட்டிருந்தாலும் கூட, இந்தப் பிரச்சினையை எழுப்ப வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்காது. சென்ற ஆண்டு தண்ணீர் வரும் வருமென்று சொல்லி, பிறகு வராது என்ற நிலை ஏற்பட்டு

அரசு தரப்பிலிருந்து உத்தரவிடப்பட்டது. அதனால் குறுவை நடமுடியாமலும் நஷ்டம் ஏற்பட்டு பெரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. குறுவை நடலாம் அல்லது நடக்கூடாது என்று அரசு உத்தரவு எதுவும் வரவில்லை. பொதுவாக இந்த அரசைச் சொல்லவில்லை. குடியரசுத் தலைவர் தலைமையில் இயங்கிய அரசு கூட இந்த ஆண்டு என்ன செய்யலாம் என்ற விவசாயிகள் அடங்கிய ஒரு குழுவைக் கூட்டியோ அதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கூட்டியோ முடிவு எதுவும் எடுக்கவில்லை. எடுத்திருக்கலாம். என்னைப் போன்ற விவசாயிகளுக்கு அறிவிக்கப்படவில்லை. வழக்கம்போல் சிலர் விதை விதைத்திருக்கிறார்கள். பதினைந்து நாட்களுக்கு மேல் அவை இருக்கக் கூடாது. அதற்குள் பறித்துவிட வேண்டும். இல்லாவிட்டால் பயிர்கள் காடாகி மாடுகள் மேய்ந்துவிடும் அளவுக்கு ஆகிவிடும். அதற்கான ஏற்பாட்டினை இந்த அரசு தெரிவிக்க வேண்டும். வானத்தை நம்பி வாழ்கிற மாவட்டம் முகவை மாவட்டம் என்று சொல்வார்கள். நாங்களும்கூட வானத்தைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறோம். மேட்டூர் அணையில் தண்ணீர் தேங்கினால் இரண்டு ஆண்டுகளுக்கு சாகுபடி செய்யலாம் என்ற சூழ்நிலை எங்களுக்கில்லை. ஆனால் அந்தப் பகுதியில் இரண்டு மழை சேர்ந்து பெய்துவிட்டால், ஏரிகளில் தண்ணீர் நிரம்பி இரண்டு பசலிகள் நடலாம் என்ற நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட நம்பிக்கை கூட தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு இல்லை. இனிமேலாவது அந்த நம்பிக்கை ஏற்படும் வகையில் சூழ்நிலைகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டு, இப்போது அவையை ஒத்தி வைத்து விவாதிக்க அனுமதி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* THIRU K. S. GANAPATHI: Hon. Deputy Chairman, Sir, I seek consent to move a motion for adjournment of the business of the Council under Rule 43 of the Council Rules to discuss a definite matter of urgent public importance, namely, non-letting out of water from Mettur Dam for the irrigation in Cauvery Delta especially in Thanjavur district. The agriculturists of this Delta are worried due to low storage position in MetturDam consequent on poor inflow from Krishna Raja Sagar Dam this year. Agriculturists look forward for very early and immediate clarification from the Government regarding the steps intended to be taken by the Government to augment the water position, in Mettur Reservoir so as to let out water for Kuruvai cultivation this year. Besides, lakhs of landless labour also look forward for an assurance from the Government that they will have employment opportunities by early release of water from Mettur Dam.

(பிற்பகல் 4–10)

1977 ஜூலை 9] [திரு. கே. எஸ். கணபதி]

தலைவரவர்களே, இந்தப் பிரச்சினையிலே தஞ்சை மாவட்டமும், திருச்சி மாவட்டமும், காவிரியிலே தண்ணீர் வராத காரணத்தினால் பாலைவனமாக மாற வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு இரண்டு சாகுபடிக்குப் பதிலாக பல பகுதிகளில் ஒரு சாகுபடிதான் நடத்த முடிந்தது. ஆனால் இந்த ஆண்டு அந்த ஒரு சாகுபடியைக் கூட நடத்த முடியுமா என்பது ஐயப்பாடாக இருந்து வருகின்றது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் ஜூலை மாதம் 27-ம் தேதி தான் மேட்டூர் அணை திறந்து விடப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு அதற்குமேல் நாளாகுமோ என்ற எண்ணம் நமக்குத் தோன்றுகின்றது. அதற்குக் காரணம் மேட்டூர் அணையில் உள்ள நீர் இருப்பு அளவு தான். ஆனால் நாம் பழைய நிலையை எண்ணிப் பார்த்தால், மேட்டூர் அணையும், கண்ணம்பாடி அணையும் வருவதற்கு முன்னால் தமிழ்நாட்டில் தஞ்சைப் பகுதியிலும், திருச்சிப் பகுதியிலும் சாகுபடி நடந்து வந்தது. கர்நாடகக்காரர்கள் காவிரித் தண்ணீரைப் பயன்படுத்தக் கற்றுக் கொள்வதற்கு முன்னால், தமிழக மக்கள் காவிரி நீரைப் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். அதற்குப் பின்னால் 1892 ஒப்பந்தம்—1924 ஒப்பந்தம் எல்லாம் ஏற்பட்டது. அந்த இரண்டு ஒப்பந்தங்களில் தமிழக மக்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பிரச்சினையில் இரண்டு அம்சங்கள் உண்டு. ஒன்று, தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு எந்த நீர் உண்டு? இந்த மேட்டூர் அணையில் தேக்கி வைக்கப்படும் நீரில் அவர்களுக்கு உரிமை உண்டா என்ற பிரச்சினையில் முதலாவதாக பருவக் காற்று கோளாறு ஏற்பட்டால, மழையினால் வரும் நீர் இந்த இரண்டு அணைகளில் தேக்கப்படாமல் நேரடியாக தஞ்சைக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். அந்த ஒப்பந்தங்களில் சொல்லியிருக்கிறார்கள். ஜூன் மாதத்தில் மேல் அணையில் குறைந்தபட்சம் $6\frac{1}{2}$ அடியாவது தண்ணீர் வரவேண்டும். சாதாரணமாக வரக்கூடிய தண்ணீர் 9 அடியாகும். குறைந்தபட்சம் $6\frac{1}{2}$ அடியாவது வரவேண்டுமென்று சொல்கிறார்கள். அந்த நீர் இருந்தால் தான், தஞ்சை மக்கள் சாகுபடியை மேற்கொள்ள முடியும். இதற்குக் காரணம் மேட்டூர் அணைக்கு பின்னதாக வந்த சாகுபடிக்கு இந்த உரிமை கிடையாது. மேட்டூர் அணை கட்டப்பட்டது முதல் கல்லணை கால்வாய் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு மட்டுமே இந்த மேட்டூர் அணையில் தேக்கி வைக்கப்படும் தண்ணீரில் உரிமை உண்டு. முதலாவது வரும் நீரில் காவிரி, கொள்ளிடம் இடைப் பகுதியிலே உள்ள தஞ்சை விவசாயிகளுக்கு முதல் உரிமை உண்டு. அதைத் தேக்கி வைக்க மேட்டூர் அணைக்கோ அல்லது கண்ணம்பாடி அணைக்கோ உரிமை கிடையாது. அப்படி இருந்தும் இது மீறப்படுகிறது. இது சட்ட விரோதமான செயல். இருந்தாலும் முந்தைய அரசு இதை உச்ச நீதி மன்றத்திற்கு எடுத்துச் சென்றிருந்தாலும் அதை ஏதோ காரணத்திற்காக பின்னர் திரும்பப் பெற்றுவிட்டார்கள். அந்த அடிப்படையில் இந்த அரசு உடனடியாக இதற்கு முயற்சி எடுத்துக் கொண்டு, நீதிமன்றத்திற்குச் சென்றாவது

நியாயம் கிடைக்கச் செய்ய வேண்டும், வலுத்தவர்கள் யார் என்று பார்ப்பதை விட நியாயம் எது என்பதைப் பார்க்க வேண்டும். இரண்டாவதாக, 1924ஆம் ஆண்டு ஒப்பந்தம் குறைந்த பட்சமாக மழை பெய்யும் காலத்தில் ஏற்பட்ட ஒப்பந்தம் அதுமட்டுமல்ல. அந்த ஒப்பந்தம் ஐம்பதாண்டுகளுடன் முடிவடைந்துவிடும் என்று சொல்வது தவறு. அந்த ஒப்பந்தத்தில் ஏதாவது மாற்றம் செய்ய வேண்டுமென்றால், ஐம்பதாண்டுகளுக்குப் பிறகு அதனைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்றுதான் சொல்லியிருக்கிறார்களே தவிர, 1974ஆம் ஆண்டோடு ஒப்பந்தம் முடிவடைந்துவிடுகிறது என்று சொல்வது தவறு. எனவே இந்த அவசர முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைப் பற்றிப் பரிசீலிக்க இந்த அவையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> துணைத் தலைவரவர்களே, காவிரி நதி நீர் சம்பந்தமான இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் தஞ்சை விவசாயிகளிடத்திலே எந்த அளவு அக்கறை காட்டுகின்றார்களோ, அதே அளவு அக்கறையை அரசாங்கம் கொண்டிருக்கிறது என்பதை முதலில் தெளிவாக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். காவிரி நதி நீர்ப் பிரச்சினை என்பது கடந்த ஐந்தாறு ஆண்டுகளாக தீவிரம் அடைந்து வருகிறது என்பதை நாமனைவரும் அறிவோம். அந்தப் பிரச்சினையை இரண்டு கண்ணோட்டத்தோடு அணுக வேண்டியவர்களாக இருக்கிறோம். ஒன்று நீண்ட கால அடிப்படையில் அதற்குத் தீர்வு காண்பது; இரண்டாவது இன்றைக்கு உடனடியாக தஞ்சையிலே இருக்கிற விவசாயிகளுக்கு எந்தப் பாதகமும் ஏற்படாமல் பாதுகாப்பது என்பதாகும். நீண்டகால அடிப்படையில் தீர்வு காண்பது என்பதை எண்ணும் போது, 1924ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தத்தைப் பற்றியும், மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதைப்போல 'லிமிடெட் ப்ளோஸ்' என்பதைப் பற்றியெல்லாம் தீவிரமாகச் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். உச்சநீதி மன்றத்திற்குப் போக வேண்டுமா, நடுவர் தீர்ப்பிற்கு விட வேண்டுமா, 'காவிரி வேலி அதாரிடி' என்று செய்யலாமா என்பதையெல்லாம் நீண்ட கால அடிப்படையில் நாம் நன்கு சிந்தித்துச் செயல்பட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். இந்த ஆட்சி பொறுப்பேற்றது, சென்ற மாதம் 30 ஆம் தேதி. அதற்குப் பிறகு ஆளுநர் அவர்களுடைய உரையும், சட்டமன்ற நடவடிக்கைகளும், தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதற்கிடையில்கூட, இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்கிற அடிப்படையில் உயர்மட்ட அதிகாரிகளோடு கலந்து நானும் பேசியுள்ளேன். நம்முடைய சட்டமன்ற மேலவை உறுப்பினர் திரு. கோ. சி. மணி குறிப்பிட்டார்

1977 ஜூலை 9] [திரு. ச. இராமச்சந்திரன்]

கள். இதிலே விவசாயிகளையும் அழைத்துப் பேசி ஒரு முடிவு காண்பது அல்லது முடிவை அறிவிப்பது அவசியம் என்று குறிப்பிட்டார்கள். அவர்களை எல்லாம் அழைத்துப் பேசுவதற்கு நேரமில்லை. ஏனென்றால் சாதாரணமாக தஞ்சை டெல்டா பகுதிக்கு தண்ணீர் விடப்பட வேண்டியது ஜூன் மாதம் கடைசி வாரத்தில் தான். எப்போதும் அது தான் மரபு. ஆனால் 1974 ஆம் ஆண்டிலிருந்து இந்த நிலை மாறி வந்துள்ளது. 1974-ல் ஜூலை மாதம் 20ஆம் தேதி மேட்டூரிலிருந்து தண்ணீர் விடப்பட்டிருக்கிறது. 1975-ல் ஜூலை மாதம் 4ஆம் தேதியும், 1976-ல் ஜூலை மாதம் 24ஆம் தேதியும் தண்ணீர் திறந்து விடப்பட்டிருக்கிறது. 1960–61 என்று எடுத்துப் பார்க்கின்ற போது, 1960-ல் ஜூன் மாதம் 15ஆம் தேதி விடப்பட்டிருக்கிறது. 1961-ல் ஜூன் மாதம் 19ஆம் தேதி விடப்பட்டிருக்கிறது. ஆகவே ஒரு மாதம் தள்ளி வந்துவிட்டோம் என்பதையும் நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன். இந்தச் சூழ்நிலையில் மேட்டூரிலே இன்றைக்கு இருக்கின்ற தண்ணீரைத் திறந்துவிட்டால், அது குறுவை சாகுபடிக்குப் போதாது என்பது நாம் அறிந்த ஒன்று. ஆனால் அதே நேரத்தில் குறுவை சாகுபடியைக் கட்டாயம் செய்து தீரவேண்டும் என்பதில் இந்த அரசாங்கம் உறுதியாக இருக்கிறது. எந்தக் காரணத்தைக் கொண்டும், குறுவை சாகுபடி செய்வதைத் தள்ளிப் போடுவதற்கோ தாமதப்படுத்துவதற்கோ, நிச்சயமாக நம்முடைய நாட்டு மக்களின் அடிப்படையில் பார்க்கின்றபோது இடம் கொடுப்பது சரியாகாது என்பதை இந்த அரசாங்கம் தீவிரமான கொள்கையாகக் கொண்டிருக்கிறது. அதை உணர்ந்துதான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருநாடக மாநில முதலமைச்சரோடு தொடர்புகொண்டு—நாளைக்கு ஒரு நாள் விடுமுறை இருக்கிறது—அந்த ஒரு நாளைக் கூட இதற்காகப் பயன்படுத்தி, பெங்களூருக்குச்சென்று அவர்களைச் சந்தித்து, நம்முடைய விவசாயிகள் பிரச்சினை பற்றியும், காவிரி நதி நீர் பிரச்சினைபற்றியும் பேசுவதற்கு இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு நல்ல முடிவு நிச்சயமாகக் கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கின்றேன். பொதுவாக அண்டை மாநிலங்களோடு இருக்கக் கூடிய நதி நீர் பிரச்சினையை நாம் கொஞ்சம் ஜாக்கிரதையாகக் கையாள வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதில் எப்படியும் தஞ்சையில் இருக்கக் கூடிய விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்படாமல், குறுவை சாகுபடி எந்தவிதத்திலும் பாதிக்கப்படாமல், பரிகாரத்தைக் காண நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு, இந்தப் பிரச்சினையில் தொடர்ந்து சிந்தித்து, அதற்கான செயல்களை வகுத்துக் கொண்டிருப்பதால், அவையை ஒத்தி வைத்துத்தான் விவாதிக்க வேண்டும் என்ற நிலையில் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. சி. மணி : துணைத் தலைவரவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் நிச்சயமாக குறுவை சாகுபடி நடக்கும், அதிலே எந்தவிதமான சந்தேகமும் வேண்டாம் என்று சொன்னார்கள்........

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவையை ஒத்தி வைக்கக்கோரி அனுமதி கேட்டுத்தான் முன்னறிவிப்பு கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, விளக்கம் கேட்டால் போதும்.

திரு. கோ. சி. மணி : விளக்கம்தான் கேட்கின்றேன். சொன்னால் சொல்லட்டும், இல்லாவிட்டால் வேண்டாம். குறுவை நடலாம் என்று சொன்னதால், குறுவை விதை எப்போது, எத்தனை நாட்களில் நடலாம் என்று உத்திரவாதம் கொடுக்க முடியுமா ?

(பிற்பகல் 4-20)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் என்பதை தலைவரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தலைவரவர்களே நடவு எப்போது தேவை என்பதை விவசாயிகள் நன்கு அறிவார்கள். எப்போது நடவு செய்தால் நல்லதென்று அவர்கள் கருதுகிறார்களோ, அந்த நாளைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு பணியாற்றலாம். அதற்கு இந்த அரசு ஒப்புதல் தருமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் அவசியமில்லாததால், தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கிறேன்.

(2) சென்னை புதுக் கல்லூரியைக் காலவரம்பின்றி மூடிவிடுவதாக அதன் நிர்வாகம் அறிவித்துள்ளது குறித்து.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, சென்னை நகரிலுள்ள புதுக் கல்லூரியை காலவரம்பின்றி மூடிவிடுவதாக அதன் நிர்வாகம் அறிவித்துள்ளதால், ஆயிரக் கணக்கான மாணவர்கள் கல்வி பயிலும் வாய்ப்பினை இழந்து தவிக்கும் நிலைமையைக் கருதியும், கல்வியினுடைய முக்கியத்துவத்தைக் கருதியும் தமிழகத்தின் தலைநகரான சென்னையில் நடக்கும் இந்தப் பிரச்சினை குறித்துப் பேச வேண்டுமென்று என்னுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்தை இங்கே நான் முன்மொழிய அனுமதி கோருகிறேன்.